### விஸ்வகர்ம கல்வி மற்றும் சமூக நற்பணி அறக்கட்டளை சார்பில்

# 101 மாணவ–மாணவிகளுக்கு கல்வி ஊக்கத்தொகை

## சென்னையில் நடந்த விழாவில் வழங்கப்பட்டது

சென்னை, டிச.11–

சென்னையில் உள்ள விஸ்வகர்ம கல்வி மற்றும் சமூக நற்பணி அறக்கட்டளையின் ஆண்டுவிழா, அறக்கட்டளை தலைவர் கே.ராமையன் தலைமையில் நடைபெற்றது. விழாவில், சென்னை மாநகராட்சி மேல்நிலைப்பள்ளிக்கூடம் மற்றும் அரசு மேல்நிலைப்பள்ளிக்கூடங்களில் 10–வது வகுப்பு, பிளஸ்–1, பிளஸ்–2 படிக்கும் 101 மாணவ–மாணவிகளுக்கு கல்வி ஊக்கத் தொகையை டாக்டர் டி.முருகசெல்வம், பி.எஸ்.ரெங்கநாதன், எஸ்.நடராஜன் ஆகியோர் வழங்கினார்கள்.